VOL. 11 | SPECIAL ISSUE 1 | AUGUST 2023
P-ISSN: 2321-788X | E-ISSN: 2582-0397

# Shanlax International Journal of Arts, Science and Humanities

(A Peer - Reviewed - Scholarly Indexed Quarterly Journal)



ஹோலிகிராஸ் ஹோம்
சயின்ஸ் கல்லூரி, தூத்துக்குடி

மற்றும்

SHANLAX
#SINCE1990

சான்லாக்ஸ் பன்னாட்டு ஆய்விதழ்

தொகுதி - 4

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

## இலக்கியங்கள் காட்டும் பெண் நிலைப்பாடு

ஒருங்கிணைப்பாளர்கள்
முனைவர் மி. ஜோஸ்பின் ரேணுகா
முனைவர் ஞா. அந்தோணி சுரேஷ்

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX JOURNALS
editor@shanlaxjournals.com | www.shanlaxjournals.com

Scanned with OKEN Scanner

| | | |
|---|---|---|
| 25 | பெண் நிலைப்பாடுகள்- ஈஸ்ட்ரோஜன் கவிதைகள் வாயிலாக<br>**முனைவர் இரா. இந்துபாலா** | 128 |
| 26 | புறநானூற்றில் மரணமும் மகளிர் நிலைப்பாடும்<br>**முனைவர் பி. திவ்யா** | 133 |
| 27 | புறநானூற்றில் தாயின் வீர உணர்வுகள்<br>**ஷைனி .ப & முனைவர் தே. டெனினா** | 139 |
| 28 | எட்டுத்தொகையில் வாழ்வியலில் தோழியின் பங்கு<br>**ஆ. பினில் ஜாய் & முனைவர் வைலா பேபி** | 144 |
| 29 | புனைவுலகில் மலைத் தோட்ட கூலிப்பெண்கள்<br>**அ. உய்க்காட்டராஜா & முனைவர் த.க. ஜாஸ்மின் சுதா** | 148 |
| 30 | சங்க இலக்கியப் பெண்களின் வீரம்<br>**நா. செல்வம்** | 154 |
| 31 | கி.ராஜநாராயணனின் படைப்புகளில் பெண் பாத்திர படைப்பு<br>**முனைவர் சி. ராமலெட்சுமி** | 158 |
| 32 | சகலத்திலும் சிறந்தவள் சங்கப் பெண்கள்<br>**முனைவர் க. அலமேலுமங்கை** | 165 |


Scanned with OKEN Scanner

# புறநானூற்றில் மரணமும் மகளிர் நிலைப்பாடும்

*முனைவர் பி. திவ்யா*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பாத்திமா கல்லூரி, மதுரை

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஆகஸ்ட்

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.5281/zenodo.8233316

## முன்னுரை

இலக்கியம் என்பது மனித வாழ்வை படம் பிடித்து காட்டும் கருவியாகும். அவ்வகையில் சங்கத்தமிழரின் வாழ்வையும் வழக்கங்களையும் புலப்படுத்துகின்றன சங்க இலக்கியங்கள். அதிலும் சங்க கால மக்களின் புற வாழ்வினை எழுத இயற்றப்பட்ட புறநானூறு தமிழரின் புறவாழ்வு நிகழ்வுகளோடு அந்நிகழ்வுகளால் நேரும் அகமன உணர்வுகளையும் பதிவு செய்துள்ளது. அவற்றில் ஒன்றாக மரணத்தையும் அது ஏற்படுத்தும் மன வலிகளையும் அதிகம் பகிர்வு செய்துள்ளது. பொதுவாக வீர யுக படைப்பாகக் கருதப்படும் புறநானூற்றில் வீரம் கோபம் முதலானவை ஆண்களின் குரல் வழியே பதிவாகியுள்ளன. ஆனால் மரணம் குறித்த கருத்துக்களை பெரும்பாலும் பெண்கள் குரல்களே பேசுகின்றன. கையறுநிலைத் துறையில் தன்னை ஆதரித்த கொடையாளர் இறக்கும் பொழுது பதிவு செய்யப்படும் சில பாடல்கள் விதிவிலக்காக இருப்பினும் பெரும்பான்மை பெண் நிலை பாடல்களே. அத்தகு பாடல்களில் பல பெண்பாற் புலவர்களால் பாடப்பட்டவையும் உள்ளன. அப்படிப் பெண்பாற்புலவர்களால் எழுதப்பட்ட மரணம் குறித்த பாடல்களை ஆராய முற்படுகிறது இக்கட்டுரை. பெண் பார்வையில் இருந்து மரணத்தைக் கையாளும் பாடல்களில் மரணிப்பவர் யார் என்பதை பொறுத்து அம்மரணத்தை அணுகுதல் மாறுபடுகின்றது. அதன் பின்னணியில் பெண்ணுக்கு உரியதாக ஆக்கப்பட்ட சார்பு நிலை வாழ்க்கைக் காரணமாக உள்ளது என்பதைக் கருதுகோலாகக் கொண்டு இவ்வாய்வு நகர்கின்றது.

புறநானூற்றில் 16 பெண்பாற்புலவர்களின் 59 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் அதிகபட்சமாக ஔவை 33 பாடல்களை இயற்றியுள்ளார். அவர் தவிர அள்ர் நன்முல்லையார் ஒக்கூர் மாசாத்தியார் காக்கை பாடினையார் காவற் பெண்டு காமக்கனி நப்பசலையார் குறமகள், இளவெயினியார் தாயங்கண்ணியார் நக்கண்ணையார் பூங்கனுத்திரையார் பெருங்கோப்பெண்டு இளவெயினி பொன்முடியார் மார்பித்தி மாறோகத்து நப்பசலையார் முதலான பெண் புலவர்களின் பாடல்களும் இடம்பெற்றுள்ளன. இவர்களின் பாடல்கள் வீரம் கொடை முதலான மன்னர்களின் புகழை இயம்புதாக மட்டுமின்றி அரசியல் நகர்வுகளில் பெண்களின் பங்களிப்பு இருந்தமையையும் புலப்படுத்துவனமாக உள்ளன.



Scanned with OKEN Scanner

பெண்ணுக்கு அச்சம் மடம் நாணம் தேவை என வலியுறுத்தும் ஆரியர் மரபு உள் நுழைந்து விட்ட போதும் 16 பெண்கள் எழுத்தறிவு பெற்றவர்களாய் அரசியல் பேசியமையும் நம் சமூகத்தின் சமத்துவ பன்மையைப் படம்பிடித்துக் காட்டுவதாய் உள்ளது. ஆயினும் அது எல்லா பெண்களுக்கும் இயல்பானதாக இருந்திடவில்லை. அதனாலேயே மரணம் அவர்களை அதிகம் பாதித்துள்ளது. அதனைப் பெண் புலவர்கள் தங்களின் எழுத்தாணிகளைக் கூர் தீட்டி இன்று நாம் உணரும் வண்ணம் பதிவிட்டுள்ளனர்.

புறநானூற்றில் பல பாடல்களில் மரணம் குறித்த செய்திகள் கீட்டப்படுகின்றன. போர் என்பது வீரம் எனப் புகழப்பட்டாலும் மரணமும் அதன் பின் விளைவுகளும் மறக்கக்கூடாதவையாய் எழுதி ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. கையறு நிலை ஆனந்தப் பையுள் உவகைக்கலுழ்ச்சி தாபத நிலை முதுபாலை முதலான துறைகள் வழி மரணம் எடுத்து ரைக்கப்பட்டுள்ளது. அதில் கையறுநிலை பெண்ணுக்கு மட்டுமின்றி ஆணுக்கும் மரணம் தரும் வலியைப் பதிவு செய்கின்றது. ஒரு மன்னனின் மரணம் அவரைச் சார்ந்து நிற்கும் அவரால் ஆதரிக்கப்படும் புலவருக்கு நேரும் இழப்பை எடுத்துரைக்கும் விதமாகவே பெரும்பாலும் கூறப்பட்டுள்ளது. ஆனால் உவகை கலுழ்ச்சி ஆனந்தப் பையுள் தாபத நிலை முதுபாலை ஆகிய நான்கு துறைகளும் மரணத்தோடு பெண்களுக்கு இருந்த நிலைப்பாட்டை உணர்த்துவனவாய் உள்ளன. இந்நிலையில் ஒரு மன்னரின் இறப்பால் கையேற்று நிற்கும் பெண் புலவரின் நிலை மகனை இழந்த தாயின் குரல் கணவனை இழந்த பெண்ணின் வலி என மூன்று தளத்தில் விரிகிறது இவ்வாய்வு.

**மன்னரின் மரணமும் பெண் புலவர் புலம்பலும்**

தன்னைப் புரந்த மன்னனின் மரணம் புலவர்களுக்குப் பேரிழப்பாக இருந்துள்ளது. வேறு தொழில் செய்யும் சிலர் புலவர்களாக இருந்துள்ளனர். அவர்களது பொருளாதார தேவையை அத்தொழில் சரி செய்திருக்க கூடும். ஆனால் பல புலவர்கள் கலைஞர்களாகவோ அல்லது பாரதி போல 'எமக்குத் தொழில் கவிதை' என்று வாழ்ந்தவர்களாகத் தான் உள்ளனர். அத்தகு சூழலில் அவர்கள் தன் வாழ்வாதாரத்திற்கு தன் குடும்ப பொருளாதார தேவைக்குச் சார்ந்து இருக்கும் மன்னனின் மரணம் அவர்களைப் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. அம் மன்னனின் மரணம் நாட்டிற்கு நாட்டு நலனுக்குப் பேரிழப்பு என்பதை உணர்ந்து வருந்தினாலும் தனது வாழ்வின் மையம் ஆடிப் போனதை பெரும்பாலான புலவர்கள் பதிவு செய்துள்ளனர். அப்பாடல்கள் கையறுநிலைத் துறையில் பதிவாகியுள்ளன. புறநானூற்றில் 42 கையறுநிலை பாடல்கள் உள்ளன. அவற்றில் பெண் கவிஞர்களின் பாடலும் உண்டு.

இதில் குறிப்பிடத்தக்கது அதியமான் அஞ்சியின் மரணத்தால் கையற்று நின்ற துண்வை பாடிய பாடல்கள். ஔவையைப் பரந்த மன்னனான அதியன் என்று மட்டும் கூறி சுருக்கி விட முடியாத ஆழ்ந்த நட்பு அதியன் - துண்வையின் நட்பு. ஏனெனில் தமது உயிர் காக்கும் நெல்லிக்கனியைக் கூட ஔவைக்குத் தந்து தன் உயிரினும் மேலானவராக ஔவையைக் கருதும் அன்பை அதணீச்ன் காட்டுகிறார். அதனை

**"சிறியிலை நெல்லி தீம்கனி குறியாது**
**ஆதல நின் அகத்து அடக்கி**
**சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே!"[1]**

என அன்பு பொங்க அங்கீகரிக்கிறார் ஔவையைப் அப்படித்தன்னை நேசித்த நண்பனான அதியனின் மரணம் ஔவையைப் பெரிதும் பாதிக்கிறது.

**"சிறிய கள் பெறினே எமக்கியும் மண்ணே"**

என்னும் தன் பாடலில்

**"நரந்தும் நாறும் தன் கையால்**
**புலவு நாறும் என் தலை தைவரும் மன்னே"[2]**

என அவர்களின் நட்பையும் தன்னைத் தாய் போல அதியன் பேணியமையையும்





Scanned with OKEN Scanner

கூறுகிறார். அப்பாடல் ஒரு ஒப்பாரிப் பாடலின் முழு தன்மையோடு பதிவாகியுள்ளது. தன் நண்பனோடு தனக்கு இருந்த நல்ல அனுபவங்களைச் சொல்லி அவனின் பெருமை உரைத்து அவன் இல்லாமை புலவர்களுக்கு எங்கனம் பேரிழப்பாகும் என்று உரைத்து இனி தான் என் செய்வேன் எனும் எதிர்காலம் நோக்கிக் கலங்கும் பதிவாக ஒப்பாரியின் முழுமை பிரதியாக இப்பாடல் இடம் பெற்றுள்ளது. மற்றொரு பாடலில்

> **"இல்லாகியரோ காலை மாலை**
> **அல்லாகியர் யான் வாழும் நாளே!"[3]**

என அதியன் இல்லா உலகில் தான் வாழ விரும்பாத உணர்வைப் பதிவு செய்கிறார் ஔவை. இவ்வாறு தன்னை மிகவும் நேசித்த மன்னனின் மரணத்தினால் தானும் தன்னைப் போன்ற புலவர்களும் கையேற்று நிற்கும் நிலையை ஔவை பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

> **"அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்**
> **எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர் கொள்ளார்**
> **இற்றைத் திங்கள் வெண்ணிலவில்**
> **வென்றெறி முரசின் வேந்தர் எம்**
> **குன்றும் கொண்டார் எந்தையும், இலமே"[4]**

எனும் பாரி மகளிரின் பாடலும் கையறு நிலை பாடலைப் பிற புலவர்கள் பாடலோடு அவற்றை ஒப்பிட இயலாது "நில உடைமை சமுதாயத்தின் விளைவே பாரி மகளிர் தந்தையை இழந்ததும் நாட்டினை இழந்ததும் ஆகும். அதோடு மட்டுமின்றி செல்வவளம் இன்றி நின்றதால் குன்றினை இழந்து இயற்கையிடமிருந்தும் தன்னை மணம் புரிந்துகொள்ள மறுத்ததால் பிறரிடம் இருந்தும் அந்நியப்பட்டுள்ளனர்."[5] என்னும் ஒரு ஆய்வாளரின் கருத்து பாரி மகளிரின் கையற்ற நிலைக்கான காரணத்தை எடுத்துரைக்கின்றது.

### மகனை இழந்த தாயின் நிலைப்பாடு

வீரநிலை காலமாய் இருந்த சங்ககாலத்தில் ஒரு ஆண் குழந்தையின் பிறப்பு என்பது போரிட்டு மாய்வதிலே தான் நிறைவு பெறுகிறது என சமூக கற்பிதம் உள்ளது.

> **"குழவி இறப்பினும் ஊன்றடிப் பிறப்பினும்**
> **ஆளென்று வாழின் தப்பார்"[6]**

எனும் பாடல் ஒரு ஆண் குழந்தை இறந்த பிறந்தாலோ அல்லது முழுமையடையாத பிண்டமாக கருநிலையில் பிறந்தாலும் மார்பில் கீறி விழுப்புண் உண்டாக்கிப் புதைக்கும் அளவிற்கு ஆணின் மரணம் வீரத்தோடு பொருந்தியிருக்க வேண்டும் என்னும் மற உணர்வு மிகுந்திருந்தது.

> **'வெள்ளை வெள்யாட்டுச் சொச்சைப் போலத்**
> **தன்னோரன்ன இளையோரிருப்பப்**
> **பலர் மீது நீட்டிய மண்டையென் சிறுவனைக்**
> **கால்கழி கட்டிலிற் கிடப்பித்**
> **தூவெள் ஏறுவை போர்ப்பித் திலதே"[7]**

என்னும் ஔவையின் பாடல் ஒரு இளைஞன் சிறுவனாய் இருந்தாலும் அவன் காலற்ற கட்டிலில் கிடத்தப்படும் வகையில் போரிட்டு சாவதே பெருமை என எண்ணப்படும் நிலை இருந்தமையைக் காட்டுகின்றது. இது ஒரு புலவனின் மனநிலையாக மட்டுமல்ல தாயின் மனநிலையாகவும் இருந்ததைப் புறநானூற்றுப் பாடல்கள் வழி அறிய முடிகின்றது. தன்மகன் மரணச் செய்தி கேட்டு அவன் இறந்தான் என்பதற்காய் அத்தாய் வருந்துதல் இயல்பே. ஆனால் அம் மகன் புறப்புண்பட்டு இறந்தான் என்று கூறக் கேட்டு அதிர்ச்சியும் வெறுப்பும் அடைவதோடு

> **"மாண்டு அமருக்கு உடைந்தனன் ஆயின் உண்ட என்**
> **முலை அறுத்திடுவன் யான் எனச் சினை,"[8]**

எனக் கோபம் கொள்ளும் தாயின் சீற்றத்தை பதிப்பிக்கின்றார் காக்கை பாடினேன் பின் அது இல்லை என அருகில் எழும்புவதை கழிச்சியால் மகனின் இறப்பிற்காய் அவன் பிறந்த பொழுதை விட உவகை அடைவதாயக் கூறுகின்றது. இதை உவகை கலுழ்ச்சித் துறையில் அமைந்த மற்றொரு பாடலில்

> **"இடைபடை அழுவத்துச் சிதைந்து வேறாகிய**
> **சிறப்புடையாளன் மாண்பு கண்டருளி**
> **வாடுமுலை ஊறிச் சுரந்தன ஓடா புட்கை**
> **விடலைத் தாய்க்கே"[9]**

என வயதான தாயின் முலை மகன் புறம் கொடாது போரிட்டு இறந்த செய்தி கேட்டுத்



Scanned with OKEN Scanner

தாய்மை பெருமை கொள்ள வழிச் சாந்ததாகக் கூறுகிறார் ஔவை. மேலும் வெறிபாடிய காமக் கண்ணியார்

"வெருவரு குருதியொடு மயங்கி உருவி காந்து
ஓருவாய்ப் பட்ட தெரியல் ஊன் செத்து
பருந்து கொண்டு உகப்ப யாம் கண்டனம்
மறம்புகல் மைந்தன் மறைந்த மாறே"[10]

எனத் தன்மகன் போர்க்களத்தில் உடல்சிதைந்து பருந்துக்கு இரையாகும் சூழலைப் பெருமிதத்தோடு எதிர்கொள்ளும் தாயைக் காட்டுகின்றார். இவையெல்லாம் சாத்தியமா என இன்றையப் பார்வையில் கேள்விகள் எழக்கூடும். ஆனால் மன்னராட்சி நிலவுடைமை காலத்தின் கற்பிதம் போர் வீரம் என்பவற்றை ஒரு போதை உணர்வு போலப் புகுத்தியுள்ளது மனிதர்கள் மனதில். அதிலும் நேரடியாகப் போரிடும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பெண்ணுக்கான நாட்டுப்பற்று என்பது போரிடும் மகனைத் தருதலே என்னும் உள்மனப் பதிவைப் புகுத்தியுள்ளது அதனால் தான்

"பால் கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்
செறாஅது ஓச்சிய சிறுகோல் அஞ்சவொடு
உயவோடு வருந்தும் மன்னே இனியே
புகர் நிறம் கொண்ட களிறு அட்டு ஆனான்
முன்னாள் வீழ்ந்த உரவோர் மகனே"[11]

என்னும் பொன்முடியார் பாடலில் உள்ளது போல தன் கணவன் இறந்த பின் கோளால் பயம் காட்டி பாலுண்ணச் செய்யும் சிறுவனையும் அதாவது தன் மகனையும் போருக்கு அனுப்பும் வகையில் வீர வெறி பெண்கள் மனதில் பதிந்திருந்தமையை அறிய முடிகிறது. இவை நோக்க மகனின் மரணம் ஈன்ற தாய்க்குப் பேரிழப்பாக, பெரும் வலியாக நீங்காத வடுவாக இருக்கும். என்றாலும் அது போரின் பொருட்டு விழுப்புண் பெற்று நிகழ்ந்திருந்தால் அதனால் கிடைக்கும் பெருமித உணர்வை இழப்பை மிஞ்சி நிற்பதாக பெண்பாற்ப் புலவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

**கணவனின் மரணமும் மனைவியின் நிலைப்பாடும்**

போரில் இறந்தவனின் தாய் உணர்வைப் பதிவு செய்துள்ளது போல மனைவியின் உணர்வும் புறநானூற்றில் மிகுதியாகப் பகிரப்பட்டுள்ளது. தன் குழந்தையை இழக்கும் தாய் அதற்கான துயரை அடைந்த போதிலும் அவனது வீர மரணம் தரும் பெருமித உணர்வு அந்த சோகத்தை மிஞ்சி நிற்பதாய்ப் புலவர்கள் குறிப்பிடுகின்றனர். எனின் மனைவியின் மனநிலையும் அத்தகையதாகவே இருந்திருக்க கூடும் என ஊகம் எழலாம். ஆனால் உண்மை நிலை அவ்வாறு இல்லை. கணவனை இழந்த மனைவியின் குரலில் ஆற்ற இயலாத சோகமும் எதிர்காலம் குறித்த அச்சமும் அடுத்து வாழ விரும்பாத வெறுப்புணர்வும் முன்னிறுத்தப்படுகின்றன.

கணவனை இழந்த மனைவியர், அதாவது விதவைப் பெண்களை புறநானூறு கழிகல மகளிர் (புறம் 280) பருத்திப் பெண்டிர் (புறம் 125) தொடிகழி மகளிர் (புறம் 238) கைம்மை (புறம் 125 261) உயவற் மகளிர் (புறம் 246), எனும் பெயர்களால் குறிக்கின்றது. அத்தகு நிலைக்கு ஆளாகும் பெண்கள் முன், இரு வாய்ப்புகள் சங்க காலத்தில் இருந்துள்ளன. ஒன்று உடன் கட்டை ஏறுவது. மற்றொன்று கைம்மை நோன்பு நோற்பது. உடன்கட்டை ஏறுவது அதன் வழி தன் உயிரைத் தானே எடுப்பது கொடுமையானது. என்றாலும் அதனைப் பெண்கள் விரும்பியுள்ளனர்.

"உயவல் பெண்டிரேம் அல்லேன் மாதோ
பெருங்காட்டு பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கு அரிதாக தில்ல: எமக்கு எம்
பெருந்தோள் கணவன் மாய்ந்தென, அரும்பு அற
வள் இதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயும் ஓரற்றே"[12]

என்னும் பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு ஆனந்தப்பையுள் துறையில் பாடிய பாடல் அவள் உடன்கட்டை ஏற அவளைச் சுடும் தீயும் பொய்கையும் ஒன்று போல எனக் கூறுகின்றார். அதைத் தடுப்போரைக் கண்டு

"செல்க எனச் சொல்லாது ஒழிக என விலக்கும்
பொல்லா சூழ்ச்சி பல் சான்றரே"[13]



Scanned with OKEN Scanner

எனக் கோலம் கொள்கிறாள். எனில் இதற்குக் காரணம் அவள் கணவன் மீது கொண்ட அன்பே எனக்கு கொள்ளலாம். அதுவும் ஒன்றாக இருத்தல் கூடும். ஆனால் அதனினும் முக்கியமானது ஒருவேளை உடன்கட்டை ஏறாவிடில் அனுபவிக்க நேரும் கைம்மைக் கொடுமையே ஆகும். அது குறித்துக் உரை, கைம்மை என்றால் என்ன என அறிவது அவசியமாகின்றது. "கணவனை இழந்த பெண்களைக் கைம்பெண் என்பர். அவ்வாறு கணவனை இழந்த பெண்கள் சில செயல்களைக் கடைபிடிக்க வேண்டியிருந்தது. இதைக் கைம்மை நோன்பு என்பர்".[14] இக்கைம்பெண் நோன்பை கடைபிடிக்க வேண்டிய கட்டாயத்தில் பெண்கள் இருந்துள்ளனர். அது அவ்வளவு எளிதானதாக இருந்திருக்கவில்லை, "கைம்மை பெண்களுக்கு அளிக்கும் உச்ச நிலை. பெண்மையின் தன்மை மறுக்கப்பட்டு வாழ்வின் வண்மையெல்லாம் உருவானதே போன்ற ஒரு நிலையை ஏற்றுக் கொண்டு வாழும் நிலைமையை கைம்மை"[15] எனப்படுகின்றது. அதாவது இயல்பான ஒரு வாழ்வு அவர்களுக்கு மறுக்கப்படுகின்றது. இத்தகைய கைம்மை நோன்பை ஏற்கும் விதவையர் தங்கள் முடியினைக் களைந்து வளையல்கள் களைந்து வெள்ளாடை உடுத்தினர். இதில் "ஒப்பனை நீக்கம் உணவு நீக்கம் பழக்க நீக்கம் என்ற மூன்று கைமை துன்பத்தின் மூன்று நிலைகள் காணப்படுகின்றன"[16]

முதலில் ஒப்பனை நீக்கம்

"கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி உணவின் மனைவியோடினியே"[17]

என்னும் பாடல் அடி மூலம் கூந்தல் களைதலும், வளை நீக்குதலும் அறிய முடிகின்றது. வளையலை உடைத்தல் கூந்தல் களைதல் ஆண்பாற் புலவர் பாடல்களிலும் இன்னும் மிகுதியாக பதிவாகியுள்ளது. மேலும்

"...நறுநெய் தீண்டாது
ஆடையிடைக் கிடந்த நெய்பழிப் பண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிபெய்தட்ட
வேளை வெந்ததை வல்சியாகப்
பரல் பெய் பண்ணிப் பாயின்றி வதியும்"[18]

என்னும் பாடல் வரிகள் வழி கைம்மை நோன்பிருப்போர் நெய் உண்ணக்கூடாது. பிழிந்த தண்ணீர் சோற்றோடு எள்ளுத், துவையல் புளி சேர்த்து வேகவைத்த வேளைக் கீரையை உண்டுள்ளனர் என்பதை காட்டுகின்றது. "கணவனை இழந்த மகளிர் சிறந்த உணவினை உண்ணாமல் மிக எளிய உணவை உண்டனர் தங்கள் உணர்வுகளை சுருக்கிக் கொண்டனர்"[19] எனக்கூறுகிறார் ஜெயா. உணவு உணர்வோடு தொடர்புடையது எனும் எண்ணத்தில் இத்தகு உணவுகளை உண்ண அவர்கள் நிர்பந்திக்கப்பட்டுள்ளனர். இத்தகு நிர்பந்தங்களை எதிர்கொள்ள விரும்பாத பெண்கள் அதனினும் மரணம் மேல் என்றே உடன்கட்டை ஏறி உள்ளனர். "உணர்ச்சி உள்ள மகளிர் கைம்மையால் இழிவு படுத்தப்பட விரும்பாமை வெளிப்படை. இம்மகளிர்க்கு ஊ வாழ்க்கையில் இருந்த ஈடுபாடு முழுவதும் கணவனோடு அழிந்துவிட்டது என்பதே அப்பொழுது நிலவிய நிடிலமை"[19] என்கிறார் ந. சுப்பிரமணியன் இத்தகைய நிலைக்குக் காரணமாக நிலஉடைமையைச் சுட்டுகிறார் வே பெருமாள் சாமி. அவர், "தந்தை வழி சமூகம் தோன்றி ஆணாதிக்கம் தலையெடுக்க தொடங்கிய காலகட்டத்திலேயே பெண்களை அடிமைப்படுத்தும் வழக்கம் தோன்றி விட்டது. தனி சொத்துடைமை பற்றிய சிந்தனை தோன்றித் தொடங்கிய காலகட்டத்திலேயே கற்பும் கைம்மையும் பெண்களுக்கு வலியுறுத்தும் வழக்கமும் வந்துவிட்டது"[20] என்கிறார்.

இவ்வாறு பெண்ணை உடைமையாகப் பார்க்கும் சமூகம் முன் வாழ்ந்த வாழ்வை வாழ விடாது அவளை நிர்பந்திக்க தன் முந்தைய கால வாழ்விற்கும் இந்த இன்றைய வாழ்விற்கு மாறவும் முரணை பெண் சிந்துபதை புறநானூறு 248 புறநானூறு 250 எனும் இரு பாடல்களில் பதிவு செய்கின்றனர் பெண்பாற்புலவர்கள். இத்தகு முரணான வாழ்வை இதுவரை தான் வாழ்ந்த வாழ்விலிருந்து வேறாக உணரும் பெண்கள் தான் இச்சமூகத்திலிருந்து

தனித்து விடப்படுதலை அந்நியப்படுத்தப்படுதலை உணர்ந்துள்ளனர். எனவே அப்பெண்கள் தனக்குத் தானே அந்நியமாகி போகிறார்கள். அப்படி அந்நியமாகி போவதை காட்டிலும் உயிர் விடுதலை சிறந்ததென உயிரையும் மாய்த்துக் கொண்டுள்ளனர்[21] என்கிறார் முனைவர் க தனலட்சுமி.

மேற்கூறியவற்றை நோக்க கணவனை இழந்த பெண்கள் கைம்மை நோன்பு நோற்பது அக்கால சமூக நிர்பந்தமாக இருந்திருக்கிறது. வழி நிறைந்த வாழ்வை விரும்பாத பெண்கள் மரணத்தை விரும்பி ஏற்றுள்ளனர். இவ்வாறு கணவனை இழந்த மனைவியர் தன் கணவன் போரில் வீரமரணம் அடைந்தாலும் அவ் வீரத்தைக் கொண்டாட முடியாத சமூக அழுத்தத்திற்கு ஆளாகி அவலச்சுவை நிறைந்ததாகவே அவர்களின் குரல் புறநானூறில் பதிவாகியுள்ளது. இத்தகு சமூக அழுத்தம் இருந்த போதிலும் அதனைப் பதிவு செய்யும் சுதந்திரம் பெற்றவளாக பெண் இருந்து ள்ளமையும் இவண் நோக்கத்தக்கது.

## முடிவுரை

புறநானூற்றுக் கவிஞர்களின் மரணம் குறித்த தகவல்களை ஆராய்கையில் புரவலர் மரணத்தால் கையற்ற புலவர் மகனின் வீர மரணத்தால் இரும்பூதடையும் பெண்கள் கணவனின் மரணத்தால் கலங்கும் பெண்கள் என மூன்று நிலையான பெண்களை பார்க்க முடிகின்றது. இவற்றில் முதல் நிலை எனக் கூறலில் அன்பும் ஆற்றாமையும் தெரிகிறது இரண்டாவது நிலையினர் வீர மரணம் என்பது ஈன்ற தாய்க்கு பெருமை தருவது என உட்பகுத்தப்பட்ட கற்பித்தால் உருவான மகிழ்வை காட்சிப்படுத்துகின்றது. மூன்றாவது நிலையில் தான் தனக்கு அந்நியமாகும் அளவிற்கு நிர்பந்திக்கப்படும் கணவனை இழந்த மனைவியின் வேதனையும் வாழ்வினை இழந்த வாழ்வின் மீதான வெறுப்புணர்வும் புலப்படுகின்றது. இம்மூன்று நிலைக்கும் அடிப்படையாக அன்றைய கால நிலவுடைமைச் சமூகம் அது ஏற்படுத்திய ஆண் ஆதிக்க பெண் அடிமை நிலைஅம் உள்ளது என்பது ஆய்வின் முடிவாகின்றது.

## மேற்கோள் குறிப்பு


1. புறநானூறு, பா. எ. 91
2. மேலது , பா. எ. 235
3. மேலது, பா. எ. 232
4. மேலது, பா. எ. 112
5. முனைவர் க. தனலட்சுமி, புறநானூறும் இருத்தலியலும், ப. 167
6. புறநானூறு, பா. எ. 286
7. மேலது, பா. எ. 278
8. மேலது, பா. எ. 295
9. மேலது, பா. எ. 271
10. மேலது, பா. எ. 310
11. மேலது, பா. எ. 246
12. மேலது, பா. எ. 246
13. மேலது, ப.169
14. இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், ப.312
15. https://groups.google.com/g/tamilmanram/c/Vb-GkQ9KktkY?pli=1
16. புறநானூறு, பா. எ. 250
17. மேலது, பா. எ. 246
18. முனைவர் வ. ஜெயா, சங்கப் பெணபாற் புலவர்களின் மொழியும் கருத்தும், ப.74
19. டாக்டர் ந. சுப்ரமணியன், சங்ககால வாழ்வியல், ப.394
20. வே. பெருமாள்சாமி, சங்க இலக்கியக் காட்சிகள், ப. 150
21. முனைவர் க. தனலட்சுமி, புறநானூறும் இருத்தலியலும், ப. 167




Scanned with OKEN Scanner